# SPECIAL SONGS

## 01. போராட்டம் இல்லாத மனிதர்கள்

போராட்டம் இல்லாத மனிதர்கள் யாருண்டு
போராடி ஜெயித்திடுவேன்
துன்பங்கள் இல்லாத மனிதர்கள் யாருண்டு
அதையும் நான் மேற்க்கொள்ளுவேன்
தனிமைகள் இல்லாத மனிதர்கள் யாருண்டு
நான் மட்டும் இல்லை அறிவேன்
கவலைகள் இல்லாத மனிதர்கள் யாருண்டு
கர்த்தரை மட்டும் நம்புவேன்

ஆத்துமாவே நீ கலங்குவதேன் நீ தியங்குவதேன்
நீ நொறுங்குவதேன்
நேசர் இயேசு உன் பட்சம் இருக்க
நீ அஞ்சுவது ஏனோ நீ அஞ்சுவது ஏ......னோ

யோபுக்கு வந்த சோதனைகள் எல்லாம்
நீக்கிய தேவன் ஒருவர் என்னோடும் உண்டு
யோசேப்பு பெற்ற தீமைகளையெல்லாம் நன்மையாய்
மாற்றிய தேவன் என்னோடும் உண்டு
தாவீதின் தேவன் என்னோடும் உண்டு
சேனைக்குள் பாய்வேன் மதிலை நான் தாண்டிடுவே....ன்

யாக்கோபு கண்ட ஏமாற்றமெல்லாம்
மாற்றிய தேவன் ஒருவர் என்னோடும் உண்டு
மோசேயை கொண்டு செங்கடலை பிளந்து
தடையெல்லாம் நீக்கிய தேவன் என்னோடும் உண்டு
இயேசு என் தேவன் என்னோடும் உண்டு
மறித்தாலும் உயிர்ப்பேன் என்றென்றும் வாழ்ந்திடுவே....ன்

## 02. எந்தன் கன்மலையானவரே

எந்தன் கன்மலை ஆனவரே
என்னை காக்கும் தெய்வம் நீரே
வல்லமை மாட்சிமை நிறைந்தவறே
மகிமைக்கு பாத்திரரீ

ஆராதனை உமக்கே
ஆராதனை உமக்கே
ஆராதனை உமக்கே
ஆராதனை உமக்கே

உந்தன் சிறகுகலின் நிழலில்
என்றென்றும் மகிழ செய்தீர்
தூயாவரே என் துணையாளரே
துதிக்கு பாத்திரரே

எந்தன் பலவீன நீரங்க்களில்
உம கிருபை தந்தீர் ஐயா
ஏசு ராஜா என் பெலனாநீர்
எதற்கும் பயமில்லையே

எந்தன் உயிருள்ள நாட்கலளல்லாம்
உம்மை புகழுந்து பாடிடுவேன்
ராஜா நீர் செய்த நன்மைகளை
என்னி துதித்திடுவேன்

## 03. கூடுமே எல்லாம் கூடுமே

கூடுமே எல்லாம் கூடுமே
உம்மாலே எல்லாம் கூடும்
கூடாதது ஒன்றுமில்லை - உம்மால்
கூடாதது ஒன்றுமில்லை

கடல்மீது நடந்தீரையா
கடும்புயல் அடக்கினீரே
சாத்தானை ஒடுக்கினீரே
சர்வ வல்லவரே

செங்கடல் உம்மைக் கண்டு
ஓட்டம் பிடித்தது ஏன்
யோர்தான் உம்மைக் கண்டு
பின்னோக்கிச் சென்றது ஏன்

மரித்து உயிர்த்தீரையா
மரணத்தை ஜெயித்தீரையா
மறுபடி வருவீரையா
உருமாற்றம் தருவீரையா

உம் நாமம் சொன்னால் போதும்
பேய்கள் ஓடதையா
உம் பெயரால் கைகள் நீட்டினால்
நோய்கள் மறையுதையா

## 04. உம்மால் ஆகாத காரியம் ஒன்றுமில்ல

உம்மால் ஆகாத காரியம் ஒன்றுமில்ல (3)
எல்லாமே உம்மால் ஆகும் - அல்லேலூயா (2)

ஆகும் எல்லாம் ஆகும்
உம்மாலே தான் எல்லாம் ஆகும்- 2

சொல்லி முடியாத அற்ப்புதம் செய்பவர் நீரே அய்யா நீரே
எண்ணி முடியாத அதிசயம் செய்பவர் நீரே அய்யா நீரே
அப்பா உமக்கு ஸ்தோத்ரம் அன்பே உமக்கு ஸ்தோத்ரம்

எனக்கு குறித்ததை நிரைவேற்றி முடிப்பவர் நீரே அய்யா நீரே
எனக்காக யாவையும் செய்து முடிப்பவர் நீரே அய்யா நீரே
அப்பா உமக்கு ஸ்தோத்ரம் அன்பே உமக்கு ஸ்தோத்ரம்

வரண்ட நிலத்தை நீருற்றாய் மாற்றுபவர் நீரே அய்யா நீரே
அவாந்தர வெளியை தண்ணீராய் மாற்றுபவர் நீரே அய்யா நீரே
அப்பா உமக்கு ஸ்தோத்ரம் அன்பே உமக்கு ஸ்தோத்ரம்

## 05. பாவங்கள் போக்கவே சாபங்கள் நீங்கவே

பாவங்கள் போக்கவே சாபங்கள் நீக்கவே
பூலோகம் வந்தாரையா
மனிதனை மீட்கவே பரலோகம் திறக்கவே
சிலுவையை சுமந்தாறையா .. 2

கண்ணீரை துடைத்தாறையா... சந்தோசம் தந்தாறையா -2

எந்தன் ஏசுவே... எந்தன் ஏசுவே..
எந்தன் ஏசுவே.. எந்தன் ஏசுவே.. (2)

தங்கத்த கேட்கவில்லை வைரத்த கேட்க்கவில்லை
உள்ளத்தை கேட்டாறையா
ஆஸ்திய கேட்க்கவில்லை அந்தஸ்தகேட்கவில்லை
உள்ளத்தை கேட்டாறையா.. 2

நான் தேடி போகவில்ல... என்னை தேடி வந்தாரையா .. -2

தாய் உன்னை மறந்தாலும் தந்தை உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறக்கமாட்டார்
நண்பன் உன்னை மறந்தாலும் உற்றார் உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறக்க மாட்டார்.. 2

கரம் பிடித்து நடத்திடுவார்.. கன்மலை மேல் நிறுத்திடுவார் .. -2